# 2 தீமோத்தேயு
# ஒரு அறிமுகம்

*2 தீமோத்தேயு நிருபத்திற்கான இந்தப் படிப்பின் அமைவானது ஒரு பழம் பெரும் போர்வீரர் சுவிசேஷத்தில் தமது மகனுக்கு காண்பித்த உணர்வுகளில் இருந்து முளைத்தெழும்புகின்றது. இந்த அமைவானது சில வழிமுறைகளில் எனது இளமைப்பருவத்தில் மனதில் பதிந்த கணம் ஒன்றுடன் இணைவுபடுகின்றது. அக்கணத்தில் நான் ஒரு பழம் பெரும் போர்வீரர் தம் இராணுவப் பணியிலிருந்து விலகிச் சென்றதைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.*

*ஜெனரல் டக்ளஸ் மெக்ஆர்தர் என்பவர் ஏப்ரல் 19, 1951ல் அவையினருக்கு ஆற்றிய சொற்பொழிவின் முடிவு வார்த்தைகள் பின்வருமாறு:*

> *இந்த நூற்றாண்டு பிறக்கு முன்னதாகவே, நான் படையில் சேர்ந்த பொழுது, அது எனது சிறு வயது நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் யாவற்றின் நிறைவேற்றமாய் இருந்தது. மேற்கு முனையில் நான் வாக்குறுதி கொடுத்ததிலிருந்து உலகம் பலமுறை சுழன்றுள்ளது, மற்றும் எனது நம்பிக்கைகளும் கனவுகளும் மாயமாகியுள்ளன, ஆனால் அந்த நாட்களில் படை வீரர் பாடும் பாடலின் பல்லவி யொன்றை இன்னும் நான் நினைவு கூறுகின்றேன், அது பழம் பெரும் வீரர்கள் ஒருக்காலும் இறப்பதில்லை; அவர்கள் மங்கி மட்டுமே செல்கின்றனர் என்று மிகவும் பெருமிதத்துடன் அறிவித்தது. மற்றும், அந்தப் படையின் பழம் பாடலின் பழம் பெரும் போர் வீரர்களைப் போன்றே, நான் இப்பொழுது எனது படைப்பணியை முடித்து, மங்கி மட்டுமே செல்லுகின்றேன், கடமையைக் காணத் தேவன் அவனுக்கு அருளிய வெளிச்சத்தின்படி முயற்சி செய்த பழம் பெரும் படை வீரன் ஒருவன் என்ற வகையில் கடந்து செல்லுகின்றேன். சென்று வருகிறேன்.[1]*

*இவரது இக்கூற்றுக்கள் பவுல் சுவிசேஷத்தில் தான் பெற்றெடுத்த தமது குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு (1:2; 2 தீமோ. 1:2) எழுதிய நிருபத்திற்கு நடைமுறைப்படுத்தப்படும் என்றால், அவைகள் (அவரது கூற்றுக்கள்) எவ்வளவு அழகு மிக்க வகையில் ஏற்புடையதாக இருக்கின்றன! தீமோத்தேயுவுக்கும் நம் யாவருக்கும் இது தமது பிரிவு உபசார உரையாயிருந்தது என்பதைப் பவுல் அறிந்திருந்தாரா இல்லையா என்பது அறியப் படாதுள்ளது, ஆனால் கிறிஸ்துவுக்குள் பழம் பெரும் போர் வீரராயிருந்த அவர் ஒருக்காலும் உண்மையில் மரித்திருப்பதில்லை - அவர் மங்கி மறைய மட்டுமே செய்துள்ளார்!*

பவுலின் சுவிசேஷப் பயணங்கள் அல்லது ரோமாபுரியில் அவரது கடைசி நாட்கள் ஆகியவை பற்றிக் கேட்டுணருவதற்காக நாம் பவுலுடன் அமர முடியாது என்றிருக்கையில், அவர் நூற்றாண்டுகளினூடாக வாழ்ந் துள்ளார். அவர் நமது ஆவிகளைத் தூண்டியுள்ளார், நமது சிந்தைகளை உருவப்படுத்தியுள்ளார், மற்றும் அவர் தம் வல்லமை நிறைந்த ஆளுமைத் தன்மையினாலும் தேவன் கொடுத்த ஆணைகளினாலும் கிறிஸ்தவ ஊழியம் செய்வதற்காக நமது சித்தங்களை விழித்தெழச் செய்துள்ளார்!

ஜெனரல் மெக்ஆர்தர் தமது பிரிவு உபசார உரையை நிகழ்த்தியதை நான் கவனித்த பொழுது, நான் நேசித்த தேசத்தையே நேசித்த ஒரு பழம் பெரும் போர் வீரருக்குப் பிரியாவிடை அளிப்பதை நான் உணருகையில் எனது தொண்டை அடைத்துக் கொண்டதையும், எனது கண்களில் கண்ணீர் வழிந்தோடியதையும் நான் நினைவுகூருகின்றேன். 2 தீமோத்தேயு நிருபத்தில் உயர்ந்த அளவில் காணப்படும் உணர்வினை அறிந்த நிலையுடன் இந்நிருபத்தைக் கவனமாய்ப் படித்தல் என்பது, இதன் மூலப்பிரதியின் மீது பவுல் மற்றும் தீமோத்தேயு ஆகியோரின் கண்ணீர் சிந்தப்பட்டதைக் கண்ணோக்க எவரொருவருக்கும் வாய்ப்பளிக்கின்றது.

இந்த நிருபத்தில், பவுலின் இருதயம், அவரது நம்பிக்கை, அவரது நினைவு மற்றும் அவரது செய்தி ஆகியவற்றினால் ஆத்துமா கலக்கப்பட முடியும்.

## பவுலின் இருதயம்

கிறிஸ்துவுக்குள் பழம் பெரும் வீரர் ஒருவர் மரணத் தருவாயில் சிறையில் இருக்கையில் எழுதிய சொற்றொடர்களில் சிலவற்றைத் தியானித்துப் பாருங்கள்:

> …தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல், பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது.
>
> … நான் இரவும் பகலும் இடை விடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி, சந்தோஷத் தால் நிறையப்படும்படிக்கு, உன்னைக் காண வாஞ்சையாயிருந்து … உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால் … இதினிமித்தமாக, நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன் (1:1-6).
>
> … அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல் … (1:8).
>
> ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் … என்னை விட்டு விலகினார் களென்று அறிந்திருக்கிறாய் (1:15).
>
> ஆதலால், என் குமாரனே, … நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி (2:1-3).

*... உன் ஊழியத்தை நிறைவேற்று, ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது (4:5, 6).*

*நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு (4:9).*

*நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை ... (4:16).*

*மாரிக்காலத்துக்கு முன் நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு (4:21).*

பவுலின் இருதயம் கலக்கப்பட்டு, கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியிருக்க வேண்டும். மாரிக்காலத்துக்கு முன்பு அங்கு தீமோத்தேயு சென்றார் என்ற நம்பிக்கையின் மத்தியில் இருபது நூற்றாண்டுகளுக்குப் பின்பு இளகிய இருதயங்கள் ஒரு ஏக்கத்தை காண்கின்றன!

இது தீவிரமான தனிப்பட்ட நிருபமாக உள்ளது! பவுல் தமது சொந்தப் பெயரை ஒரே ஒருமுறை (1:1) பயன்படுத்தி விட்டு, ''நான்'' என்று இருபத்தியெட்டு முறை கூறினார். "என்னை" என்பது இந்த நிருபத்தில் இருபத்தி ஆறுமுறை வருகிறது, மற்றும் "என்னுடைய" என்பது பதினோரு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது - மொத்தத்தில் நான்கு அதிகாரங்களில் (எண்பத்து மூன்று வசனங்களில்) அறுபத்தி ஆறுமுறை அவர் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இது தீமோத்தேயுவுக்குத் தீவிரமான வகையில் தனிப்பட்டதாக உள்ளது! அவரது பெயர் ஒருமுறை குறிப்பிடப்பட்டது (1:2) மற்றும் அவர் ''பிரியமுள்ள குமாரன்'' (1:2) என்றும் ''என் குமாரன்'' (2:1) என்றும் குறிப்பிடப்பட்டார். பவுல் தீமோத்தேயுவை "நீ" என்று இருபத்தி ஐந்து முறைகளும், "உன்" என்று இருமுறையும், "உன்னுடைய" என்று ஐந்து முறைகளும் குறிப்பிட்டார். சுமார் முப்பது முறைகள் ''நீ'' என்பது கட்டளைக் கூற்றுகளில் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. பவுல், "நாம்" என்று ஆறு முறைகளும், "நம்முடைய" என்று ஐந்து முறைகளும் கூட்டிக் கூறினார் - மொத்தத்தில் நான்கு அதிகாரங்களில் ஏதாவது ஒரு வழியில் தீமோத்தேயுவைப் பற்றி எண்பதுக்கும் மேற்பட்ட குறிப்புகள் உள்ளன!

வார்த்தைகளை எண்ணுதல் என்பது சலிப்பூட்டும் நுட்பமான பணியாய் இருக்கையில், இது பவுல், கிறிஸ்துவுக்குள் தமது "பிரியமான குமாரனுடன்'' நெருக்கமாய்ச் செய்தித் தொடர்பு கொள்வதற்குக் கொண்டுள்ள விருப்பத்தை வலிவாக அறிவிக்கின்றது.

## பவுலின் நம்பிக்கை

பவுலின் தனிப்பட்ட துன்பமும் அக்கறையும் இந்த நிருபம் முழுவதிலும் "கட்டப்பட்டிருக்கிற" (1:8), "கட்டப்பட்டு" (2:9), "விலங்கு" (1:16) போன்ற திறவுகோல் வார்த்தைகளைச் சுற்றி உள்ளாக நெய்யப் பட்டுள்ளன. இதை துன்புறுவதற்கான ஒரு காலம் என்று அவருடைய

சூழ்நிலைகள் அடையாளப்படுத்தின (1:12; 2:9, 12; 3:11, 12; 4:5). இது வெட்கப்பட்டிருப்பதற்கான காலம் அல்ல (1:8, 12, 16; 2:15), ஆனால் "நீடிய பொறுமையுடன்"/"சகித்துக் கொண்டிருக்க" வேண்டிய காலம் ஆகும், ஏனென்றால் கர்த்தர் விடுவிப்பார் (3:11; 4:17, 18). இது, கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருக்கு ஊக்கத்துடன் பதில் அளிக்க வேண்டிய காலமாக இருந்தது (1:17; 4:9, 21). இந்தத் தொகுப்பானது தொடர்ந்து வரும் வரைகுறிப்பில் உள்ள திறவுகோல் வார்த்தைகளினால் முக்கியப்படுத்திக் காட்டப்பட்டது: சோதனைகளின் மத்தியில் தீமோத்தேயு உறுதிப்பாட்டுடன் இருக்க வேண்டும் (அதிகாரம் 1), தீமோத்தேயு நல்ல போர் வீரராய் இருக்க வேண்டும் (அதிகாரம் 2), அவர் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் (அதிகாரம் 3), மற்றும் பவுல் செய்திருந்தது போலவே தமது ஓட்டத்தை முடிக்கப் பவுலின் கட்டளையை ஊக்கத்துடன் கவனிக்க வேண்டும் (அதிகாரம் 4) என்பதே பவுலின் வேண்டுகோளாக இருந்தது.

## பவுலின் நினைவுகள்

பவுல் ஒரு சில வழிகளில் கடந்த காலத்தில் ஒரு காலையும் எதிர் காலத்தை நோக்கி ஒரு காலும் வைத்துக் கொண்டு நிற்பவராகக் காணப் படுகின்றார். அவர் வாழ்வின் ஒரு வியூக நிலையிலிருந்து அதிகம் மகிமை யுள்ள இன்னொரு நிலைக்கு அடியெடுத்து வைக்கும் பழம் பெரும் வீரராகத் தம்மைக் காண்கின்றார்.

பவுல் தமது முன்னோர்கள் (1:3), தீமோத்தேயுவின் பாட்டி மற்றும் தாயார் (1:5; 3:14, 15), தீமோத்தேயுவின் மீது பவுல் தம் கைகளை வைத்த பொழுது "தேவனுடைய வரம்" அவருக்கு அளிக்கப்பட்டது (1:6), அவரை விட்டு விலகியவர்கள் (1:15; 2:17, 18; 4:10, 14-16), மற்றும் அவருக்கு இளைப்பாறுதல் அளித்து, விடுவித்தவர்கள் (1:16-18; 4:11, 17, 18) ஆகியோரைப் பற்றிய கடந்த கால நினைவுகளை மீண்டும் நினைவுகூர்ந்தார் (மற்றும் இவற்றைத் தீமோத்தேயுவும் நினைவுகூர வேண்டுமென்று பவுல் விரும்பினார்). மேலும் பவுல் எதிர்பார்ப்புடன் முன்னோக்கினார். அவர் "ஜீவனையும் அழியாமையையும்" (1:10), "கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுதலையும்" (2:10) மற்றும் தம்மைக் கர்த்தர் "அவரது பரலோக இராஜ்யத்தில்" மீட்கையில் (4:18) நீதியின் கிரீடத்தையும் (4:8) எதிர்நோக்கினார்.

## பவுலின் செய்தி

தீமோத்தேயு கண்டுகொள்ளாது விடுவதைப் பவுல் நிச்சயமாகவே விரும்பியிராத வகையிலான ஒரு மேலாதிக்கம் செலுத்தும் பொன் நூலிழையானது - தீமோத்தேயுவின் வாழ்வில் தேவனுடைய வசனத்தின் வியூகமான இடம் - இந்த நிருபத்தினூடே நெய்யப்பட்டுள்ளது. பரலோகத் தில் இருந்து வந்த மகிமையான அந்த வெளிப்படுத்துதல் பற்றி இருபது குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டு, பதினைந்து மாறுபட்ட சொற்றொடர்

விளக்கங்களால் அவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன: "தேவனுடைய சித்தம்" (1:1); "நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சி" (1:8); "சுவிசேஷம்" (1:8, 10); "ஆரோக்கியமான வசனங்களின் சட்டம்" (1:13); "நற்பொருள்" (1:14); "என் சுவிசேஷம்" (2:8); "தேவ வசனம்" (2:9); "சத்திய வசனம்" (2:15); "சத்தியம்" (2:18, 25; 3:7, 8; 4:4); "விசுவாச விஷயம்" (3:8); "பரிசுத்த வேத எழுத்துக்கள்" (3:15); "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (3:16); "திரு வசனம்" (4:2); "ஆரோக்கியமான உபதேசம்" (4:3); "பிரசங்கம் நிறைவேறுதல்" (4:17).

தேவனுக்கு, தக்க வகையில் ஊழியம் செய்யும் சுவிசேஷகர், புத்தகத்துடன் மிகவும் நெருக்கமாக நிலைத்திருக்க வேண்டும்! இது பவுல் இந்த சிந்தனைகளை ஒன்று கூட்டிக் கட்டுவதற்குத் தங்க நூலாகப் பயன்படுத்திய சொற்றொடர்களினால் முக்கியத்துவப்படுத்தப்படுதல் மட்டுமின்றி, பவுலிடம் இருந்தும் சத்தியத்திடம் இருந்தும் விலகிச்சென்ற மக்களின் பெயர்ப்பட்டியல் இடையிடையே வைக்கப்பட்டிருப்பதன் மூலமாகவும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது:

1. பிகெல்லுவும் எர்மொகெனேயும் (அத்துடன் ஆசியா நாட்டில் இருக்கிற யாவரும்) பவுலை விட்டு விலகினார்கள் (1:15).

2. இமெநேயும் பிலேத்தும், இவர்களின் வார்த்தை "அரிபிளவையைப் போலப் படரும்," இவர்கள் சத்தியம் குறித்து விலகிச் சென்றனர் (தவறிழைத்தனர்) (2:17, 18; 1 தீமோ. 1:20). சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போட்டனர்.

3. சிலர் திருத்தப்பட வேண்டியது அவசியமாயிருந்திருக்கும், ஏனென்றால் அவர்கள் "எதிர்ப்பு நிலையில்" இருந்தார்கள். அவர்கள் பிசாசினால் கண்ணியில் அகப்படுத்தப்பட்டு, "அவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டு" இருந்தார்கள் (2:25, 26).

4. மீறுதல்களின் முழுப்பட்டியலின் காரணமாக "கடினமான காலங்கள்" முன்னிறுத்தப்பட வேண்டியவைகளாக இருந்தன. மக்கள் "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறியாதவர்களாய்" (3:1-8) இருப்பார்கள். ஆனால் அவர்கள் "சத்தியத்தை எதிர்ப்பவர்களாய்" இருப்பார்கள்.

5. "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" என்று பவுல் கூறினார் (3:13).

6. சிலர் "ஆரோக்கியமான உபதேசத்தை" பொறுக்க மாட்டார்கள், ஆனால் தங்கள் சுய இச்சைக்கேற்ற போதகர்களைத் திரளாய்ச் சேர்த்துக் கொண்டு "சத்தியத்துக்குத் தங்கள் செவிகளை விலக்கிக் கொள்வார்கள்" (4:3, 4).

7. தேமா "இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து" பவுலைக் கைவிட்டுச் சென்றார் (4:10).

8. கன்னானாகிய அலெக்சந்தர் பவுலுக்கு வெகு தீமை செய்தார் மற்றும் "நம்முடைய வார்த்தைக்கு மிகவும் எதிர்த்து நின்றான்," எனவே தீமோத்தேயு "எச்சரிக்கையாய்" இருக்க வேண்டியது அவசியமாயிற்று (4:14, 15).

*9. பவுல் தாம் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பொழுது எல்லாரும் தன்னை "கைவிட்டதாக" கூறினார் (4:16).*

இவ்வளவு அதிகமான எதிர்மறை, பொல்லாங்கு, மற்றும் நியாயமற்ற மக்கள் மற்றும் சூழ்நிலைகள் பவுலைச் சூழ்ந்து கொண்டிருக்க (மற்றும் வரப் போகிற நாட்களில் இவை இன்னும் மோசமாகும் நிலை முன்னிறுத்தப் பட்டிருக்க), தீமோத்தேயு "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிருக்கும்படியும்'' மற்றும் அவரிடம் "ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளை" காத்துக்கொள்ளும்படியும் (1:13, 14) பவுல் விரும்பியதில் வியப்பெதுவும் இல்லை.

## பவுலின் உணர்வுப்பூர்வமான பிரியாவிடை

சிலுவையின் வீரமிக்க அந்தப் பழைய போர் வீரரினால் கூறப்பட்ட ஏவுதல் பெற்ற முடிவு வார்த்தைகளை உணர்வுப்பூர்வமான கருத்து சுற்றி நிற்கின்றது. தேவனால் தரப்பட்ட இந்த வார்த்தைகள் ''கடைசி நாட்களாகிய,'' எத்தர்கள் மேன்மேலும் கேடுள்ளவர்களாகும் (3:1, 13) நாட்களில் வாழும் நமக்குகென்று பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் நாம் கவனமாய் வாசிக்கவும், ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு வேண்டுகோளையும் தீவிரமான கவனத்துடன் பற்றிக்கொள்ளவும் வெளியிடப்பட்ட ஒவ்வொரு அறைகூவலையும் மற்றும் அட்டவணை யிடப்பட்ட ஒவ்வொரு எச்சரிக்கையையும் நமக்கு ஊக்கம் அளிக்கின்றன. மரணம் நெருங்கிய வேளையில் பவுல் கொண்டிருந்த தைரியத்தை நாமும் கொண்டிருக்க முடியும், மற்றும் எல்லாத் தீமையினின்றும் அவரை விடுவித்தவர் நம்மையும் "தம்முடைய பரம இராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (4:17, 18). இந்த வார்த்தைகள் இந்த நிருபத்தைப் படிப்பதற்கான சூழலை அமைக்கின்றன!

பவுல் 1 தீமோத்தேயு நிருபத்தில் குறிப்பிட்டிருந்த மக்கள் மற்றும் இடங்களை நாம் நன்கு அறிந்துள்ளோம். தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபத்தை நாம் படிக்கும் முன்பு இந்தப் படிப்பில் நாம் எதிர்கொள்ளப் போகும் சில பெயர்களைப் பற்றிக் கண்ணோக்குவோம்.

## 2 தீமோத்தேயுவில் உள்ள மக்கள்

### கன்னானான அலெக்சந்தர்

*"கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமை செய்தான்; அவனு டைய செய்கைக்குத் தக்கதாகக் கர்த்தர் அவனுக்கு பதிலளிப்பாராக'' (4:14).*

இம்மனிதர் பவுலுக்கு வெகு தீமை செய்ததாக அவர் கூறினார். (ஒருவேளை அவர் இவரை அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்து, இவர் கடைசியில் கைதாவதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம்.) அவர்

*1 தீமோத்தேயு 1:20*ல் குறிப்பிடப்பட்ட அதே நபராய் இருக்கக் கூடும், ஆனால் அவரது தொழிலைப் பற்றிக் குறிப்பிடுதலானது இன்னொரு அலெக்சந்தருடன் இவரைக் குழப்பிக் கொள்வதைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாகக் காணப்படுகிறது. அவரைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு எச்சரிக்கை செய்தார்.

### ஆக்கில்லாவும் பிரிஸ்காவும் (பிரிஸ்கில்லாள்)

*"பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும் ... என் வாழ்த்துதலைச் சொல்லு" (4:19).*

பொந்து நாட்டிலிருந்து வந்த இந்த நண்பர்களுக்குப் பவுல் தீமோத்தேயுவின் மூலம் வாழ்த்துதல்களை அனுப்பினார். பவுல் கொரிந்து நகரில் ஆக்கில்லாவுடனும் அவர் மனைவி பிரிஸ்கில்லாளுடனும் (கூடாரத் தொழில் செய்பவர்கள்) வேலை செய்திருந்தார், மற்றும் அவர்கள் பவுலுடன் எபேசுவுக்கு(ம்) வந்திருந்தார்கள். கிலவுதியு இராயனின் உத்தரவின் கீழ் அவர்கள் மற்ற எல்லா யூதர்களுடனும் கூட ரோமாபுரியில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்கள்.

### கார்ப்பு

*"துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற் சுருள்களையும் நீ வருகிறபோது எடுத்துக் கொண்டு வா" (4:13).*

பவுல் இரண்டாம் முறை கைதான பிறகு ரோமாபுரிக்குப் பயணமான பொழுது தமக்குரிய பொருட்கள் சிலவற்றைத் துரோவா நகரில் கார்ப்பு என்பவர் வசம் ஒப்புவித்து விட்டுக் கிளம்பினார்.

### கலவுதியாள்

*"... ஐபூலுவுடன், புதேஞ்சும், லீனுவும், கலவுதியாளும் மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (4:21).*

ரோமாபுரியில் இருந்த இந்தப் பெண் சீஷியிடமிருந்து வாழ்த்துதலைப் பவுல் தீமோத்தேயுவுக்கு அனுப்பினார். கலவுதியாள் ஒரு பிரிட்டிஷ் வேலைக்காரியாய் இருந்தாள் என்றும், அவளுடைய தந்தையாகிய கோகிடப்னஸ் அரசன் அவளுக்கு திபேரி கிலவுதியுவின் பெயரைத் தழுவி அப்பெயரை இட்டார் என்றும் ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு ஒன்று கூறுகின்றது. இதே வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புதேஞ்சு என்பவர் இவளின் கணவராய் இருக்கலாம்.

### கிரெஸ்கே

*"... கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும் ... போய் விட்டார்கள்" (4:10).*

பவுலுடன் இருந்த இந்த ஊழியர் பவுலுக்கு மரண தண்டனை அளிக்கப்படுவதற்கு முன்பு கலாத்தியாவுக்குச் சென்றிருந்தார்.

### தாவீது

*"தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து, என் சுவிசேஷத்தின் படியே, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக் கொள்" (2:8).*

தாவீது அரசரைப் பற்றிய குறிப்பிடுதலானது, யூத தீர்க்கதரிசனத்தின் தலைமுறைகள் பற்றிய நிறைவேற்றமாக இயேசு கிறிஸ்து மேசியாவாக இருக்கிறார் என்பதற்கு நினைவூட்டுதலாயிருந்தது.

### தேமா

*"ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய் விட்டான்" (4:10).*

கொலோசெயர் 4:14 மற்றும் பிலே. 24 ஆகிய வசனங்களில் தேமா பவுலின் உடன் ஊழியக்காரர் என்று குறிப்பிடப்பட்டார். இருப்பினும் அவர் ''இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து'' பவுல் தம் மரண தண்டனைக்காக காத்திருக்கையில் அவரை ரோமாபுரியில் கைவிட்டுப் பிரிந்து தெசலோனிக்கே நகருக்குச் சென்றிருந்தார்.

### எரஸ்து

*"எரஸ்து கொரிந்து பட்டணத்தில் இருந்து விட்டான், துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்" (4:20).*

பவுல் ரோமாபுரியில் தமது மரண தண்டனைக்குக் காத்திருக்கையில் அவரது இந்த உடன் ஊழியர் கொரிந்து நகரில் இருந்தார். இதற்கு முன்பு எரஸ்து தீமோத்தேயுவின் பயணக் கூட்டாளியாக மக்கெதோனியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தார் (அப். 19:22). இவர் கொரிந்துவில் இருந்த உக்கிராணக்காரரும் பவுலினால் மனமாற்றப்பட்டவருமான அதே எரஸ்துவாய் இருக்கலாம் (ரோமர் 16:23). பழங்கால கொரிந்து நகரில் "எரஸ்து நடைபாதை" என்று அறியப்பட்ட சாலையின் ஒரு பகுதியில் இந்தப் பெயர் செதுக்கப்பட்டுள்ளது.

### ஐபூலு, புதேஞ்சு, லீனு

*''மாரிக்காலத்துக்குமுன் நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு. ஐபூலுவும், புதேஞ்சும், லீனுவும், கலவுதியாளும், மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (4:21).*

ரோமாபுரியைச் சேர்ந்த இந்த சீஷர்கள் பவுலின் மூலம் தீமோத்தேயுவை வாழ்த்தினார்கள்.

### ஐனிக்கேயாள்

*"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது ..." (1:5).*

*தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாள், லீஸ்திராவில் இருந்த ஒரு யூத விசுவாசியாய் இருந்தாள். (அப். 16:1ஐக் காணவும்.)*

### இமெநேயும் பிலேத்தும்

*"அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்கள்" (2:17, 18).*

இந்தக் கள்ள போதகர்கள் கண்டனம் பண்ணப்பட்டார்கள் (1 தீமோ. 1:20ஐக் காணவும்). அவர்கள் உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்து விட்டது என்று போதித்துக் கொண்டிருந்தனர்.

### யந்நேயும் யம்பிரேயும்

*"யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல இவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள். விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள். ஆனாலும் இவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை, அவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டதுபோல, இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும்" (3:8, 9).*

பார்வோனின் அரண்மனையில் இருந்த இந்த மந்திரவாதிகள் மோசேயை எதிர்த்தார்கள் (யாத். 7:11). இதே போன்று சிந்தையில் சீர் கெட்ட மனிதர்கள் எதிர்காலத்தில் எழும்புவார்களென்றும் இவர்களுக்குக் கடினமான சிட்சை தேவைப்படும் என்றும் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறினார்.

### லோவிசாள்

*"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது, ..." (1:5).*

ஒரு யூத விசுவாசியான லோவிசாள் தீமோத்தேயுவின் பாட்டியாக இருந்தாள். இவளைப் பவுல் விசுவாசத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் தீமோத்தேயுவுக்குக் காண்பித்தார்.

### லூக்கா

*"லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான் ..." (4:11).*

இந்தப் பிரியமான வைத்தியர் (கொலோ. 4:14) ஒப்பீட்டுச் சுவிசேஷங்களில் ஒன்றையும் நடபடிகளையும் எழுதியவராய் இருந்தார். லூக்கா பவுலுடன் பயணம் செய்திருந்தார் (பிலே. 24) மற்றும் பவுல் அப்போஸ்தலர் தமக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் முன்னர் தீமோத்தேயுவை ரோமாபுரிக்கு வரத் துரிதப்படும்படி வேண்டிக் கொள்ளுகையில் இவர் (லூக்கா) மட்டுமே அவருடன் இருந்த ஒரே துணையாளராய் இருந்தார்.

## மாற்கு

*"... மாற்குவை உன்னோடே கூட்டிக் கொண்டு வா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (4:11).*

ஒப்பீட்டுச் சுவிசேஷங்களில் ஒன்றை எழுதியவரும் பர்னபாவின் இனத்தாருமான மாற்கு முதல் ஊழியப் பயணத்தில் தம் மாமனுடனும், பவுலுடனும் துணையாய்ச் சென்றார். கலாத்தியாவில் அக்குழுவினர் தங்கள் ஊழியத்தைத் தொடங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் இவர் அந்த முதல் பயணத்தைக் கைவிட்டுத் திரும்பி விட்டதால், இரண்டாம் பயணத்தில் பயணத் துணையாளியாக இவர் பவுலினால் ஏற்றுக் கொள்ளப் படாதிருந்தார். இருப்பினும் பவுல் தனது மரண தண்டனையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில், மாற்கு ஊழியத்தில் பவுலுக்கு உதவியாய் இருந்ததால் அவரைக் கூட்டிக் கொண்டு வரும்படி தீமோத்தேயுவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## மோசே

*"யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்; இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்" (3:8).*

பவுல் தீமோத்தேயுவுக்கு, மோசேயை தேவனுடைய மக்களுக்குத் தலைவர் என்ற வகையில் பார்வோனின் அரண்மனையில் இருந்த மந்திரவாதிகளான யந்நே மற்றும் யம்பிரே ஆகியோரின் செயல்பாடுகளில் இருந்த சூழ்ச்சியான எதிர்ப்பையும் தந்திரத்தையும் எதிர்த்து நின்றதைக் குறிப்பிட்டார்.

## ஒநேசிப்போரு

*"ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடு வாராக; அவன் அநேகந்தரம் என்ன இளைப்பாற்றினான்; என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவில்லை" (1:16).*

*"பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக் கும் என் வாழ்த்துதலைச் சொல்லு" (4:19).*

எபேசுவிலிருந்து வந்த இந்தக் கிறிஸ்தவர் ரோமாபுரியில் பவுலைத் தேடி, கண்டு பிடித்து, அவருடன் நட்புறவானார். அப்போஸ்தலருடனான அவரது நட்புறவானது ஒநேசிப்போருவின் உயிருக்கே அபாயமானதாக இருந்திருக்கலாம், எனவேதான் பவுல் "ஒநேசிப்போருவுக்கும் அவரது வீட்டாருக்கும்" என்பதற்கு மாறாக "ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும்" கர்த்தர் இரக்கம் கட்டளையிடும்படி ஜெபித்து வாழ்த்துதலை அனுப்பினார்.

## பிகெல்லுவும் எர்மொகெனேயும்

*"ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு*

*எர்மொகெனே முதலாய் என்னை விட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்" (1:15).*

ஆசியாவில் இருந்தவர்களில் அப்போஸ்தலருடைய போதனையை விட்டு விலகியவர்களாக இந்தக் கள்ள போதகர்கள் பவுலினால் குறிப்பிடப் பட்டார்கள்.

### தீத்து

*"... கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய் விட்டார்கள்" (4:10).*

தீத்து பவுலுடன் ஒரு சக ஊழியராய் இருந்தார். பவுல், வரவிருந்த தமது சொந்த மரண தண்டனையைக் கண்ணோக்கி, தீத்துவை தல்மாத்தியா (இப்பொழுது அல்பேனியா என்றுள்ள இல்லிரிக்கத்தின் ஒரு மாகாணம்) வுக்கு அனுப்பியிருந்ததாகத் தீமோத்தேயுவுக்குத் தகவல் அளித்தார்.

### துரோப்பீமு

*"... துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்" (4:20).*

பவுலுடன் இருந்த இந்த சக ஊழியர் சுகவீனமாய் இருந்தார் மற்றும் இவர் மிலேத்துவில் விட்டுச் செல்லப்பட்டார். பவுல் குணப்படுத்தும் வல்லமையைக் கொண்டிருந்தும், இந்த நண்பரைக் குணப்படுத்தாதிருந்தார் என்ற உண்மையானது, புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் தெய்வீக செய்தியை உறுதிப்படுத்தவே செய்யப்பட்டன என்பதற்குப் பலத்த சாட்சியமாக உள்ளது. வசனம் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்ட பின்பு மீண்டும் மறு உறுதிப்படுத்துதல் தேவையற்றதாக இருந்தது. (யோவா. 20:30, 31ஐக் காணவும்.)

### தீகிக்கு

*"தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன்" (4:12)*

சிறிய ஆசியாவில் இருந்து வந்த இந்தக் கிறிஸ்தவர் கிரேக்கத்திலிருந்து எருசலேம் வரைக்கும் பவுலுடன் துணை சென்றார், மற்றும் எபேசியர் கொலோசெயர், பிலேமோன் நிருபங்களைக் கொடுக்க பவுலினால் அனுப்பப்பட்டார். இவரே கொலோசெயர்களுக்குப் போதித்தார் என்பதும் கொலோசெயில் பிற்பாடு எழுந்த வேத எதிர்ப்பைக் கையாளுவதில் இவர் பவுலின் உதவியை நாடினார் என்பதும் உறுதி. இவர் அப். 20:4; எபே. 6:21; கொலோ. 4:7; 2 தீமோ. 4:12; மற்றும் தீத்து 3:12 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்படுகிறார்.

## 2 தீமோத்தேயு நிருபத்தில் கூறப்படும் இடங்கள்

### அந்தியோகியா, இக்கோனியம் மற்றும் லீஸ்திரா

*"அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில்*

*எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக் கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லா வற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார்" (3:11).*

முதல் ஊழியப் பயணத்தில் பவுலும் பர்னபாவும் இந்த நகர்களில் பிரசங்கித்திருந்தனர். பிசிதியாவின் அந்தியோகியா நகரானது லிக்க வோனியா(இன்றைய துருக்கியின் ஒரு பகுதி)வில் இருந்த இக்கோனியா மற்றும் லீஸ்திரா என்ற நகரங்களுக்குத் தூரமானதல்ல.

## ஆசியா

*"ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு எர்மொ கெனே முதலாய் என்னை விட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்" (1:15).*

இந்த ரோம மாகாணத்தில் எபேசு அமைந்திருந்தது. ஆசியாவில் இருந்த யாவரும் பவுலை விட்டு விலகினார்கள் என்று அவரே கூறினார்.

## கொரிந்து

*"எரஸ்து கொரிந்து பட்டணத்தில் இருந்துவிட்டான் ..." (4:20).*

கொரிந்து என்பது அகாயா நாட்டில் இருந்த ஒரு நகரம் ஆகும். அப்போஸ்தலரான பவுல் தமக்கு நேரவிருந்த மரண தண்டனையின் கண்ணோக்கில் எரஸ்துவை இங்கு விட்டுச் சென்றார்.

## தல்மாத்தியா

*"... கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்" (4:10).*

ரோமானிய அரசினால் பவுலுக்கு மரணம் நெருங்கிக் கொண்டிருந் ததைக் கண்ணோக்கி, பவுல் தீத்துவைத் தங்களின் ஊழியம் தொடர்ந்து செய்யப்படும்படியாக இல்லிரிக்கும் மாகாணத்தில் இருந்த தல்மாத்தி யாவுக்கு அனுப்பியிருந்தார்.

## கலாத்தியா

*"... கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும் ... போய் விட்டார் ..." (4:10).*

பவுல் கிரெஸ்கேயை, சிறிய ஆசியாவின் மைய மாநிலமான கலாத்தியா வில் இருந்த சபைகளுடன் ஊழியம் செய்யும்படி அனுப்பியிருந்தார். அப்போஸ்தலருக்கு நேர விருந்த மரணத்தின் கண்ணோக்கில் இவர் (கிரெஸ்கே) அங்கு ஊழியத்தைத் தொடர வேண்டியிருந்தது.

## மிலேத்து

*"... துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்" (4:20).*

ஆசியாவின் இந்த நகரில், பவுல் தனது வியாதிப்பட்ட சக ஊழியரான

துரோப்பீமுவை, ரோமாபுரிக்குத் தமது கடைசிப் பயணத்தின்போது விட்டுச் சென்றார்.

### தெசலோனிக்கே

*"ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய் விட்டான்; ..." (4:10).*

பவுலை கைவிட்டுச் சென்ற பொழுது தேமா (தெசலோனிக்கே என்ற) மக்கெதோனியாவின் இந்நகருக்குச் சென்றார்.

### துரோவா

*"துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற் சுருள்களையும், நீ வருகிற போது எடுத்துக் கொண்டு வா" (4:13).*

பவுல் ஆசியாவின் இத்துறைமுக நகரில் தமது அங்கியையும், புத்தகங்களையும், தோற்சுருள்களையும் விட்டு வந்ததாகத் தீமோத்தேயு வுக்குத் தெரிவித்தார். அவர், தீமோத்தேயு ரோமாபுரிக்குத் தீவிரமாய்ப் புறப்பட்டு வரும்படியும், ஊழியத்திற்கு மாற்குவை அழைத்துக் கொண்டு வருகையில் (4:11-13) இந்தப்பொருட்களையும் கொண்டு வரும்படியும் விரும்பினார்.

---

குறிப்புகள்:

[1]General Douglas MacArthur, "General MacArthur's Message to Congress" (Wichita, Kan.: Defenders, 1951), 6. [2]*"1, 2 தீமோத்தேயு & தீத்து" வரிசையின் முதல் இதழில், 1 தீமோத்தேயுவுக்கான அறிமுகக் குறிப்புகளில் காணவும்.* [3]Ronald A. Ward, *Commentary on 1 and 2 Timothy & Titus (Waco, Tex.: Word Books, 1974), 131.*

---

## 2 தீமோத்தேயு நிருபத்திற்கான வரைக்குறிப்பு

***எட் சான்டர்ஸ்***

அதிகாரம் 1

I. பவுல் தீமோத்தேயுவின் ஊழியத்தில் அவரை உற்சாகப் படுத்தினார்.
   - அ. தீமோத்தேயுவுக்காகப் பவுலின் நன்றி செலுத்துதல் (1:1-5).
   - ஆ. தீமோத்தேயு தம்மில் உள்ள தேவ வரத்தை "அனல் மூட்டும்"படி நினைவூட்டுதல் (1:6, 7).
   - இ. சுவிசேஷத்திற்கென்று பாடநுபவிப்பதில் இணையும்படி

தீமோத்தேயுவைக் கேட்டுக் கொள்ளுதல் *(1:8-12).*

ஈ. ஆரோக்கியமான உபதேசம், விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றில் காத்துக் கொள்ளும்படி தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துதல் *(1:13, 14).*

உ. பிகெல்லு, எர்மொகெனே மற்றும் ஆசியாவில் இருந்த பிறரும் பவுலை விட்டு விலகினார்கள் என்பதைத் தீமோத்தேயுவுக்கு நினைவூட்டுதல் *(1:15).*

ஊ. ரோமாபுரியில் ஒநேசிப்போருவின் இரக்கத் தன்மைக்காவும், அவர் எபேசுவில் செய்த மிகச் சிறந்த ஊழியத்திற்காகவும் அவரை நினைவுகூருதல் *(1:16).*

*அதிகாரம் 2*

II. தீமோத்தேயு தாம் பெற்றுக் கொண்ட போதனையை உண்மையுள்ள போதகர்களுக்கு எடுத்துரைக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

அ. நல்ல போர்ச் சேவகனாகத் தீங்கு அநுபவித்தல் *(2:1-4).*

ஆ. மல்யுத்த வீரனாக யுத்தம் செய்தல் *(2:5).*

இ. ஒரு விவசாயி விளைச்சலை எதிர்நோக்குவது போல கர்த்தரிடமிருந்து பலனை எதிர்நோக்குதல் *(2:6-13).*

ஈ. தேவன் உண்மையுள்ளவராய் நிலைத்திருக்கிறார் என்பதை, கேட்கிறவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டும் *(2:13, 14).*

உ. சீர் கேடும் வீண் பேச்சுக்களும் தவிர்க்கப்பட வேண்டும் *(2:15, 16).*

ஊ. இமெநேயும் பிலேத்தும் வழுவிச் சென்றிருந்தனர் *(2:17-19).*

எ. கிறிஸ்தவ ஊழியர்கள் தேவனுடைய வீட்டில் பாத்திரங்களாய் இருக்கின்றனர் *(2:20, 21).*

ஏ. கள்ள போதகர்கள் செயல்விளைவுடன் திருத்தப் படுவதற்காக நீதியும் சாந்தகுணமும் நாடப்பட வேண்டும் *(2:22-26).*

*அதிகாரம் 3*

III. கடினமான காலங்கள் வர வேண்டும்.

அ. மக்கள் நிலையாக அதிக மோசடிக்காரர்களாக வளருகையில் தாங்கள் தேவனுடைய ஊழியர்கள் என்று உரிமைகோரிக் கொள்வார்கள் *(3:1-7).*

ஆ. யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றார்கள் *(3:8, 9).*

இ. பவுல் அந்தியோகியா, இக்கோனியா மற்றும் லீஸ்திராவில் எதிர்க்கப்பட்டார் *(3:10, 11).*

ஈ. விசுவாசமுள்ள யாவருக்கும் எதிர்ப்பு என்பது பங்காக இருக்கும் *(3:12).*

உ. தேவனால் ஏவப்பட்ட வேத வசனங்கள் தவறை எதிர்த்து

*நிற்கத் தேவையானவற்றை ஒருவருக்கு அளிக்கின்றது (3:13-17).*

*அதிகாரம் 4*

IV. *தீமோத்தேயு பிரசங்கியார் என்ற வகையில் தமது கடமைகளைச் செய்யும்படியும் பவுலுடன் விரைவில் ரோமாபுரியில் வந்து இணைந்து கொள்ளும்படியும் பவுல் கட்டளையிட்டார்.*

*அ. உபதேசத்திலும் திருத்துதலிலும் விசுவாசத்துடன் நிலைத்திருக்க வேண்டும் (4:1-5).*

*ஆ. பவுலின் உண்மையுள்ள ஊழியம் முடிவுக்கு வந்து கொண்டுள்ளது; அவருடைய பலன் நிச்சயமானதாக உள்ளது (4:6-8).*

*இ. புதிய ஊழியங்களுக்கென்று லூக்கா தவிர மற்றெல்லாரும் அனுப்பப்பட்டுள்ளதால் (4:9-18), தீமோத்தேயு மாற்குவை அழைத்துக்கொண்டு உடனடியாக வர வேண்டும்.*

*ஈ. தீமோத்தேயு விரைவில் வர வேண்டும் என்ற வேண்டு கோளுடன் வாழ்த்துக்களும் அனுப்பப்படுகின்றன (4:19-22).*